*ஜெர்மானிய*
*கூட்டாட்சி குடியசசு*

Bundesamt für Migration und Flüchtlinge

EUAA
EUROPEAN UNION AGENCY FOR ASYLUM

# புகலிடத்துக்காக விண்ணப்பிப்பது பற்றி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை

## துணை ஏதுமின்றி வரும் சிறுவர்களுக்கான தகவல்கள்




வணக்கம், நாங்கள் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த சிறுவர்களாவோம். நாங்கள் பாதுகாப்பு தேடிஜெர்மனி-க்கு வருவதற்கு முன்பு வெகுகாலம் பயணம் செய்தோம். நாங்கள் எங்களுடைய பெற்றோர்களின்றி, நாங்கள் மட்டுமே வந்து சேர்ந்தோம்.
வணக்கம். எனது பெயர் லிசா. நான் உங்களுக்குப் புகலிடம் (சர்வதேசப் பாதுகாப்பு என்றும் அழைக்கப்படுகிறது) கோருவதற்கு விண்ணப்பிப்பது பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டியவை எவை என்பதை விளக்கப் போகிறேன்.

# சர்வதேச பாதுகாப்பு என்றால் என்ன?







ஒருவரால் தனது சொந்த நாட்டிற்கு திரும்பிச் செல்ல முடியாதது, அங்கு அவர் ஆபத்தில் இருப்பதாலானால், அவர் சர்வதேசப் பாதுகாப்பைப் பெற்று, அந்தப் பாதுகாப்பை வழங்கிய நாட்டில் பாதுகாப்பாகத் தங்கலாம்.

சர்வதேசப் பாதுகாப்பை யார் பெறலாம் என்பதையும் அதற்கான நடைமுறை என்ன என்பதையும் உங்கள் பாதுகாவலர் உங்களுக்கு மேலும் விளக்குவார்.

ஐரோப்பாவில், சர்வதேசப் பாதுகாப்பு புகலிடம், அகதி அந்தஸ்து அல்லது துணைப் பாதுகாப்பு என்றும் அழைக்கப்படலாம். நீங்கள் “புகலிமம்” என்ற சொல்லை ஏற்கனவே கேள்விப்பட்டிருக்கலாம். சர்வதேசப் பாதுகாப்பைப் பற்றி பேசும் போது, உங்களுக்கு நினைவில் வைத்துக்கொள்ள எளிதாக இருப்பதால், நான் “புகலிடம்” என்ற சொல்லைப் பயன்படுத்துவேன்.

**நினைவில் வைத்துக் கொள்ளுங்கள், நீங்கள் இப்போது பாதுகாப்பாக இருக்கிறீர்கள்.**


ஐரோப்பாவில், ஒருவர் எங்கிருந்து வருகிறார், அவரது மதம் அல்லது தோலின் நிறம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் எல்லோரும் சமமாக நடத்தப்படுகிறார்கள்.





ஐரோப்பாவில், 18 வயதுக்குக் கீழ்ப்பட்ட அனைவரும் சிறுவர்களாகக் கருதப்படுகிறார்கள்.

ஒரு சிறுவர் என்ற வகையில் உங்களுக்கு விசேட உரிமைகள் காணப்படுகின்றன. உங்கள் பாதுகாப்பும் நல்வாழ்வும் மிகவும் முக்கியமானவை.



நீங்கள் இங்கு காட்டப்பட்டுள்ளபடி, புகலிடம் தொடர்பான அதிகாரிளளின் பணியாளர்கள் போன்ற பல்வேறு அதிகாரிகளைச் சந்திப்பீர்கள். அவர்கள் உங்களைப் பற்றியும், ஐரோப்பாவிற்கான உங்கள் பயணம் பற்றியும் உங்களிடம் கேள்விகள் கேட்பார்கள்.

நினைவில் கொள்ளுங்கள், அதிகாரிகள் உங்களைப் பாதுகாப்பதற்கும் உங்களுக்கு எது சிறந்தது என்பதைத் தீர்மானிப்பதற்கும் இங்கு இருக்கிறார்கள்.

நீங்கள் என்ன நினைக்கிறீர்கள், உங்களுக்கு என்ன தேவை, நீங்கள் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதனை அதிகாரிகளுடன் எப்போது வேண்டுமானாலும் பகிர்ந்து கொள்ளலாம்.



# பாதுகாவலர் என்பவர் யார்?





நீங்கள் உங்களுடைய பெற்றோர் இல்லாமல் இங்கு வந்திருப்பதால், அதிகாரசபைகள் உங்களுக்கு பாதுகாவலர் எனப்படுகிற ஒரு பெரியவரை நியமிக்கும், அவர் உங்களுக்கு உதவிகளை செய்வார்.

ஒரு பாதுகாவலர் என்பவர், ஐரோப்பாவுக்குத் தங்களுடைய பெற்றோர் இல்லாமல் அல்லது தங்களுக்குப் பொறுப்பான வேறொரு பெரியவர் இல்லாமல் வருகிற சிறுவர்களுக்கு உதவுகிற ஒரு நபர் ஆவார்.

பாதுகாவலர் என்பவர் ஒரு ஆணாகவோ ஒரு பெண்ணாகவோ இருக்கலாம். பாதுகாவலர்கள், பிரதிநிதிகள் அல்லது இளைஞர் நல அலுவலகத்தின் ஊழியர்களும் பாதுகாவலர்களாகப் பணியாற்றலாம் என்றும் அழைக்கப்படலாம்.

நீங்கள் உங்களுடைய பாதுகாவலரை இன்னும் சந்திக்கவில்லை என்றால், நீங்கள் அவரை வெகு விரைவில் சந்திப்பீர்கள்.

சில சமயங்களில், உங்களுடைய நிரந்தரமான பாதுகாவலரை நீங்கள் சந்திக்கும் வரை, உங்களுக்கு ஆதரவளிப்பதற்காக அதிகாரசபைகள் முதலில் ஒரு தற்காலிகமான பாதுகாவலரை நியமிக்கலாம்.






நீங்கள் தங்கியிருக்கும் காலம் பற்றி நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அனைத்தையும் விளக்கவும், முக்கியமான தீர்மானங்களை எடுக்க உங்களுக்கு உதவவும் ஒரு பாதுகாவலர் இருப்பார். உதாரணமாக, ஒரு பாதுகாவலர் உங்கள் புகலிட விண்ணப்பத்தில் உங்களுக்கு உதவுவார், நடைமுறைகளை விளக்குவார், உங்கள் உரிமைகளையும் பொறுப்புகளையும் விளக்குவார், மேலும் அதிகாரிகளுடன் நடைபெறும் சந்திப்புகளில் உங்களுனன் பங்கேற்பார்.

நீங்கள் எப்போது வேண்டுமானாலும் உங்கள் கருத்தை பாதுகாவலரிடம் தெரிவிக்கலாம், அவரிடம் கேள்விகள் கேட்கலாம், மேலும் உங்களுக்கு ஏதேனும் தேவைப்பட்டால் அதைப் பற்றியும் அவரிடம் சொல்லலாம். அவர் உங்களுக்கு ஆதரவளிப்பதற்காகவே இருக்கிறார்.



உங்களுக்கு உங்களுடைய பாதுகாவலருடன் ஏதேனும் பிரச்சினை இருந்தால், அதிகாரிகளிடம்/இளைஞர் மற்றும் அகதிகளுக்கான அதிகாரிகளிடம் தெரிவிக்கவும். அது உங்களுடைய புகலிட விண்ணப்பத்தை எதிர்மறையாகப் பாதிக்க மாட்டாது.



# நடைமுறையின் போது எந்த உதவி வழங்கப்படும்?





தங்குவதற்குப் பாதுகாப்பான ஒரு இடம்



துணிமணிகள்



உங்களுக்குத் தேவைப்படக்கூடிய மற்ற பொருட்கள்



உணவு



உங்களுக்கு மருத்துவரிடம் போக முடியும்



நீங்கள் பாடசாலைக்குச் செல்வீர்கள்



உங்களுக்குப் பொருத்தமான இடத்தில் நீங்கள் வசிப்பீர்கள், மேலும் உங்களுடைய வயதைப் பொறுத்து உங்களுக்குத் தேவையான உதவியையும் பெறுவீர்கள்.

# நான் புகலிடம் கோரினேன், இப்போது என்ன நடக்கும்?






**முதலாவதாக, உங்களுடைய விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.**
உங்கள் விண்ணப்பத்தை பதிவு செய்தய மற்றும் சமர்ப்பிக்க, உங்கள் பாதுகாவலர் புகலிட அதிகார அமைப்பிற்கு ஒரு படிவத்தை அனுப்புவார். அதன் பிறகு, உங்களுக்கு ஒரு சந்திப்பு நேரம் ஒதுக்கப்படும்; அந்தச் சந்திப்பின்போது, உங்கள் பாதுகாவலருடன் இணைந்து, நீங்கள் உங்கள் புகலிட விண்ணப்பத்தைத் தயாரித்து, பதிவு செய்து, அதே நாளிலேயே சமர்ப்பிப்பீர்கள். உங்கள் விண்ணப்பம் அந்த நாளிலேயே பதிவு செய்துகொள்ளப்படும்.
உங்களுடைய பாதுகாவலர் / உங்களுடைய தற்காலிகப் பாதுகாவலர் / நீங்கள் வசிக்கும் இடத்தில் பணிபுரியும் பெரியவர்கள், நாள் / நாட்கள் மற்றும் நேரம் / நேரங்கள் குறித்து உங்களுக்குத் தெரிவிப்பார்கள், மேலும் உங்களுடைய பாதுகாவலர் அதிகாரசபைகளுக்கு உங்களுடன் வருவார். நடைமுறையின் போது உங்களுடைய பாதுகாவலர் உங்களுடன் இருப்பார்.



# பதிவு செய்தலின் போதும் சமர்ப்பித்தலின் போதும் பின்வருவன நடக்கும்...





உங்களிடம் உள்ள அனைத்து அடையாள ஆவணங்களையும் (கடவுச்சீட்டு, அடையாள அட்டை முதலியன) அதிகாரிகளிடம் காண்பிப்பீர்கள்.

நீங்களும் உங்கள் தனிப்பட்ட உடைமைகளும் சோதிக்கப்படலாம். அதிகாரிகள் உங்கள் உடைமைகளை சிறிது காலத்திற்கு வைத்திருக்கக்கூடும்; ஆனால் அபாயகரமான உடைமைகளைத் தவிர, மற்ற அனைத்தையும் அவர்கள் உங்களுக்கு திருப்பித் தருவார்கள்.





நீங்கள் புகைப்படம் எடுக்கப்படுவீர்கள்.

உங்களுடைய கைவிரல் அடையாளங்கள் எடுக்கப்படும்.







நீங்கள் ஒரு வைத்தியரைச் சந்திக்கலாம்

- ஒரு அதிகாரி உங்களைப் பற்றியும் ஐரோப்பாவில் உள்ள உங்கள் குடும்பத்தைப் பற்றியும் கேள்விகளைக் கேட்பார்
- மேலதிக தகவல்கள் சேகரிக்கப்படும்: **உங்களது மதம் அல்லது இனம், நீங்கள் பேசும் அல்லது புரிந்து கொள்ளும் மொழிகள், நீங்கள் படித்த பள்ளி**

ஒரு அதிகாரி உங்களிடம் உங்களுடைய தொடர்பு விபரங்களை (உங்களுடைய முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம்) வழங்குமாறு கேட்பார்.



பின்வருவனவற்றைப் பற்றி உங்களிடம் மேலதிக கேள்விகள் கேட்கப்படும்:

- உங்களைப் பற்றியும் உங்களுடைய குடும்பத்தைப் பற்றியும்
- உங்களுடைய நாடு மற்றும் நீங்கள் இதற்கு முன்பு வாழ்ந்த இடங்கள்
- நீங்கள் ஏன் உங்கள் நாட்டை விட்டு வெளியேறினீர்கள், நீங்கள் ஏன் திரும்பிச் செல்ல விரும்பவில்லை
- நீங்கள் ஜெர்மனிக்கு-க்கு எப்படிப் பயணம் செய்தீர்கள்



## நினைவில் கொள்ளுங்கள்!

நீங்கள் உங்களுடைய பாதுகாவலரிடம் பேசுவதும், புகலிட அதிகாரசபைகளுடன் இணைந்து செயல்படுவதும் மிகவும் முக்கியமாகும்.



உங்களுடைய பாதுகாவலரிடமோ அதிகாரிகளிடமோ நீங்கள் கூறுவது **இரகசியமானதாக** வைத்துக் கொள்ளப்படும். இதன் அர்த்தம் என்னவென்றால், நீங்கள் அவர்களுக்கு வழங்கும் தகவல்கள் உங்களுடைய சொந்த நாட்டு அரசாங்கத்துடனோ நீங்கள் பயப்படுகிற நபர்களுடனோ ஒருபோதும் பகிர்ந்துகொள்ளப்பட மாட்டாது.






**புகலிடம் கோரும் நடைமுறையின் போது நான் ஜெர்மனி இல் தங்கியிருப்பேனா?**



பதிவுசெய்த பிறகு, உங்களுடைய விண்ணப்பத்தை எந்த நாடு பரீட்சிக்கும் என்பதை அதிகாரசபைகள் முடிவு செய்யும். அது ஜெர்மனி-ஆக அல்லது மற்றொரு ஐரோப்பிய நாடாக இருக்கும். உங்களுக்கு நாட்டைத் தேர்ந்தெடுக்க முடியாது, ஆனால் உங்களுடைய அதிக ஆர்வங்கள் கருத்தில் கொள்ளப்படும். இதை அதிகாரசபைகள் உங்களுக்கு விளக்கும்.





பதிவு செய்தலின் போது நீங்கள் அதிகாரசபைகளிடம் இவற்றைத் தெரிவிக்க வேண்டியது அவசியமாகும்:

- உங்களுக்கு வேறொரு ஐரோப்பிய நாட்டில் குடும்பத்தினர் இருக்கிறார்களா
- நீங்கள் இதற்கு முன்பு வேறொரு ஐரோப்பிய நாட்டில் புகலிடம் கோரியிருக்கிறீர்களா.

உங்களுக்கு ஐரோப்பாவில் குடும்பத்தினர் இருந்தால், உங்களுடைய குடும்பத்தினர்களைப் பற்றி உங்களுக்குத் தெரிந்த அனைத்தையும் அதிகாரசபைகளிடம் தெரிவிப்பது அவசியமாகும். நீங்கள் அவர்களுடன் இந்த நாட்டிலோ அல்லது அவர்கள் வசிக்கும் நாட்டிலோ தங்கி இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

உங்கள் குடும்பத்தினர் எங்கே இருக்கிறார்கள் என்று உங்களுக்குத் தெரியாவிட்டால், அல்லது அவர்களுடனான தொடர்பை நீங்கள் இழந்திருந்தால், அவர்களைக் கண்டறிவதற்கு உங்களுடைய பாதுகாவலரிடம் / அதிகாரிகளிடம் உதவி கேட்கலாம்.



# பதிவுசெய்தலுக்கும் சமர்ப்பித்தலுக்கும் பிறகு என்ன நடக்கும்?





நீங்கள் உங்களுடைய விண்ணப்பத்தைப் சமர்ப்பித்த பிற்பாடு, நீங்கள் புகலிடம் கோரியுள்ளீர்கள் என்பதைக் குறிப்பிடும் ஓர் ஆவணம் உங்களுக்கு வழங்கப்படும். இந்த ஆவணம் முக்கியமானது, எனவே அதை நன்கு பத்திரமாக வைத்துக்கொள்ளவும். நீங்கள் தங்கியிருக்கும் இடத்தை விட்டு வெளியே செல்லும் போதோ அல்லது அதிகாரசபைகளுடன் சந்திப்புகள் இருக்கும் போதோ அதை உங்களுடன் எடுத்துச் செல்லுங்கள்.



# எனது வயதை அதிகாரிகள் எவ்வாறு தெரிந்து கொள்வார்கள்?





உங்கள் வயதை நிரூபிக்கும் ஆவணங்கள் உங்களிடம் இல்லாவிட்டாலும், மேலும் உங்கள் வயது குறித்து அதிகாரிகளுக்கு சந்தேகம் இருந்தாலும், புகலிடம் தொடர்பான அதிகாரிகளின் பணியாளர்கள் உங்களை வயது மதிப்பீட்டிற்கு உட்படுமாறு கேட்கலாம். இது உங்கள் வயதை மதிப்பிட உதவும் ஒரு செயல்முறையாகும்.

உங்கள் வயதை மதிப்பிட பல்வேறு வழிகள் உள்ளன.

உதாரணமாக, அது நீங்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையிலோ, அல்லது அதிகாரிகள் அல்லது பிற நிபுணர்களுடன் நடத்தப்படும் நேர்காணல்களின் அடிப்படையிலோ இருக்கலாம். மேலும் சந்தேகங்கள் இருந்தால், நீங்கள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுமாறு கேட்கப்படலாம். இந்நிலையில், நீங்களும் உங்கள் பாதுகாவலரும் ஒப்புதல் வழங்குமாறு கேட்கப்படுவீர்கள்.

வயது மதிப்பீட்டின் முடிவில் நீங்கள் 18 வயதுக்கு மேற்பட்டவர் எனத் தெரிய வந்தால், நீங்கள் ஒரு பெரியவராகக் கருதப்படுவீர்கள். இந்நிலையில், உங்களுக்கு மேலும் தகவல்கள் வழங்கப்படும்.





யாராவது உங்களைக் காயப்படுத்தியுள்ளதாக அதிகாரசபைகளுக்குச் சந்தேகம் ஏற்பட்டால், உங்களுக்கு ஒரு மருத்துவரைச் சந்திக்குமாறு அவை முன்மொழியும்.

உங்களுடைய விண்ணப்பத்தைப் பரீட்சிக்கும் போது, அந்த மருத்துவப் பரிசோதனையின் முடிவுகள் கருத்தில் கொள்ளப்படும்.



**உங்கள் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்ட பிறகு, உங்களுக்கு ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தனிப்பட்ட நேர்காணல்கள் இருக்கலாம்.**

இதன் பொருள், ஒரு அதிகாரி உங்களைப் பற்றியும், நீங்கள் ஏன் உங்கள் நாட்டை விட்டு வெளியேறினீர்கள் என்பதையும், ஏன் திரும்பிச் செல்ல விரும்பவில்லை என்பதையும் பற்றி உங்களிடம் மேலும் கேள்விகள் கேட்பார். அதிகாரிகள் உங்களை ஒரு நேர்காணலில் பங்கேற்குமாறு கேட்டால், நீங்கள் அதில் கலந்து கொண்டு, உங்களுக்கு நினைவில் இருக்கும் அனைத்தையும் அவர்களிடம் சொல்ல வேண்டும். தனிப்பட்ட நேர்காணல் ஒலிப்பதிவு செய்யப்படும்.

நேர்காணல் எப்போது, எங்கு நடைபெறும் என்பதை உங்கள் பாதுகாவலர் உங்களுக்குத் தெரிவிப்பார்; மேலும், நேர்காணலின் போது அவர் உங்களுக்கு ஆதரவளிப்பார்.



# எனக்கு அதிகாரிகளின் மொழி புரியவில்லை என்றால் என்ன செய்வது?





உங்களுக்கு அதிகாரிகளின்/புகலிடம் அலுவலக ஊழியர்கள்-இன் ஜெர்மன் மொழி புரியவில்லை என்றால், உங்களுடைய மொழியைப் பேசக்கூடிய ஒரு உரைபெயர்ப்பாளர் உங்களுக்குப் புரிந்து கொள்ள உதவுவார்.

ஒரு உரைபெயர்ப்பாளருக்கு சொல்லப்படுவதை உரைபெயர்ப்பதைத் தவிர, உங்களுடைய வழக்கில் வேறு எந்த வகிபாகமும் இல்லை. நீங்கள் வழக்கு அதிகாரியிடமும் உரைபெயர்ப்பாளரிடம் கூறுவது இரகசியமாக வைத்துக்கொள்ளப்படும்.

உங்களுக்கு எது மிகவும் வசதியாக இருப்பதைப் பொறுத்து, உங்களை நேர்காணல் செய்பவர் அல்லது உரைபெயர்ப்பாளர் ஒரு பெண்ணாக அல்லது ஆணாக இருக்க வேண்டும் என்று நீங்கள் கேட்கலாம். அவர்கள் இருப்பார்கள் என்றால், அவர்கள் வழங்கப்படுவார்கள். நீங்கள் ஒரு பெண்ணை அல்லது ஆணைத் தேர்வு செய்தால், நேர்காணலுக்கு முன்பதாக வெகு விரைவில் உங்களுடைய பாதுகாவலரிடம் தெரிவிக்கவும்.






**அதற்கெல்லாம் எவ்வளவு காலம் எடுக்கும்?**




நேர்காணலுக்குப் பிறகு, நீங்கள் விளக்கிய அனைத்தும் ரராபபட்டு .

உங்களுடைய முடிவைப் பெறுவதற்கு சமர்ப்பித்த நாளிலிருந்து **6 மாதங்கள்** வரை நீங்கள் காத்திருக்க வேண்டி ஏற்படலாம். சில சமயங்களில், அதற்கு அதிக காலம் எடுக்கலாம், ஆனால் அதற்கு **21 மாதங்களுக்கு** மேல் எடுக்காது. காத்திருப்பது கடினமாக இருக்கலாம், ஆனால் பொறுமையாக இருங்கள். அதிகாரசபைகள் உங்களுக்காக சரியான முடிவை எடுக்கவே விரும்புகிறார்கள்.

உங்களுக்குக் காத்திருப்பதைச் சமாளிப்பதற்கு உதவி தேவைப்பட்டால், அது குறித்து உங்களுடைய பாதுகாவலரிடம் எப்போது வேண்டுமானாலும் நீங்கள் கேட்கலாம்.



## நண்பரொருவர் அவரது புகலிட விண்ணப்பத்தை அதிகாரசபைகள் மீளாய்வு செய்ய மாட்டாது கூறினார். அது ஏன்?





- அதிகாரிகள் முதலில் ஒரு புகலிட விண்ணப்பத்தை பரிசீலிக்க வேண்டுமா இல்லையா என்பதைச் சரிபார்ப்பார்கள்.
- உங்களுக்கு ஏற்கனவே வேறு ஒரு நாட்டில் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தாலோ, அல்லது அவர்கள் பாதுகாப்பானதாகக் கருதும் ஒரு நாட்டிலிருந்து நீங்கள் வந்திருந்தாலோ, அதிகாரிகள் உங்கள் விண்ணப்பத்தை முழுமையாகப் பரிசீலிக்காமல் இருக்கலாம்.

## நான் என்ன தீர்மானத்தைப் பெறுவேன்?





உங்களுக்குப் புகலிடம் தேவையா அல்லது வேறு தெரிவுகள் உள்ளனவா என்பதைப் புகலிட அதிகாரசபைகள் தீர்மானிக்கும்.

அந்தத் தீர்மானம் உங்களுக்கு விளக்கப்படும்.



நீங்கள் ஒரு எதிர்மறையான தீர்மானத்தைப் பெற்று, நீங்களோ உங்களுடைய பாதுகாவலரோ அதுகுறித்து உடன்படவில்லை என்றால், உங்களுக்கு அந்தத் தீர்மானத்தை நீதிமன்றத்துக்குக் கொண்டு சென்று சவாலுக்கு உட்படுத்தலாம். இது மேன்முறையீடு என்றழைக்கப்பட்டுகிதது.






## நான் புகலிட நடைமுறை பற்றி மேலதிக தகவல்களை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும்?





புகலிட நடைமுறை, உங்களுடைய உரிமைகள் மற்றும் கடமைகள் என்பவற்றை உங்களுக்கு விளக்குவதற்கு உங்களுடைய பாதுகாவலரைத் தவிர்த்து சட்ட ஆலோசகர்களும் உள்ளனர்.

அவர்களை எவ்வாறு தொடர்புகொள்வது என்பது குறித்து உங்களுடைய பாதுகாவலரிடம் கேளுங்கள்.



உங்களுக்கு உதவுவதற்காக ஒரு வழக்கறிஞர் உங்களுக்குத் தேவைப்பட்டால், உங்களுடைய பாதுகாவலரிடம் அல்லது வேறொரு அதிகாரியிடம் பேசுங்கள்.





**உங்களுடைய பாதுகாவலருடன் சேர்ந்து சட்டத்தரணிக்கு பின்வருவனவற்றில் உங்களுக்கு உதவ முடியும்:**



அதிகாரசபைகளுடனான நேர்காணலுக்குத் தயாராக்குதல்.



புகலிட அதிகாரிகளுடன் கதைத்தல்



உங்களுடைய புகலிட விண்ணப்பத்தின் மீதான தீர்மானத்தைப் புரிந்துகொள்ளச் செய்து, நீங்களோ உங்களுடைய பாதுகாவலரோ அந்தத் தீர்மானத்துடன் உடன்படவில்லை என்றால் மேன்முறையீடு செய்ல் .



உங்களுடைய புகலிடம் கோரும் நடைமுறையின் போது எந்த நேரத்திலும் நீங்கள் UNHCR-ஐத் தொடர்புகொள்ளலாம்.

UNHCR புகலிடம் கோருவோருக்கும் அகதிகளுக்கும் ஆதரவளித்து அவர்களைப் பாதுகாக்கிறது.

UNHCR-இல் பணிபுரிபவர்கள் புகலிடம் கோருவோருக்கு தகவல்களையும் உதவியையும் வழங்குகிறார்கள்.

மேலும் தகவல்களை https://help.unhcr.org/ இல் காணலாம்.



UNHCR
The UN Refugee Agency

**எனக்கு உடல்நலமில்லை என்றாலோ அடிக்கடி கவலைப்பட்டாலோ நான் எப்படி உதவி பெறுவது?**





பின்வரும் சந்தர்ப்பங்களில் உங்களுடைய பாதுகாவலரிடம், ஒரு அதிகாரியிடம் அல்லது நீங்கள் தங்கியிருக்கும் இடத்தில் பணிபுரியும் பணியாளர்களிடம் தெரிவிக்கவும்:




யாரவது உங்களைக் காயப்படுத்தி னால்


நீங்கள் கவலை, கோபம், பயம் என்பவற்றை உணர்கிறீர்கள் அல்லது உங்களுக்குத் தூங்குவது கடினமாக இருக்கிறது

உங்களுக்கு அங்கவீனம் அல்லது நோய் போன்ற வேறு ஏதேனும் சிரமங்கள் இருந்தால் அல்லது நீங்கள் கர்ப்பமானவராக இருந்தால்

இதுபோன்ற சந்தர்ப்பங்களில் உங்களுக்கு உதவி கிடைக்கும்

# எனக்கு ஏதேனும் கடமைகள் இருக்கின்றனவா?





**ஆம்**

**நீங்கள் இந்த நாட்டின் சட்டங்களையும் விதிகளையும் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.**

உங்களுக்கு விதிகள் அல்லது சட்டங்கள் பற்றி சந்தேகங்கள் இருந்தால், உங்களுடைய பாதுகாவலரிடம் கேளுங்கள்.




**உங்களுடைய பாதுகாவலர் உங்களுக்குத் தங்கச் சொன்ன இடத்தில் நீங்கள் தங்கியிருக்க வேண்டும்.**

அதிகாரிகள் உங்களுக்காக ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்துள்ளனர். அதிகாரிகளின் அனுமதியின்றி உங்கள் தங்குமிடம் அல்லது ஜெர்மனி -இலிருந்து தப்பியோடவோ வெளியேறவோ வேண்டாம்.



**நீங்கள் அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்ற வேண்டும்.**

கேட்டுக் கொள்ளப்படும் போது, அவர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்து, அவர்களின் அறிவுறுத்தல்களை நீங்கள் பின்பற்ற வேண்டும்.



**அதிகாரிகள் உங்களிடம் கேள்விகள் கேட்கும்போது, நேர்மையாக இருந்து, உங்களுக்குத் தெரிந்த அனைத்தையும் அவர்களிடம் சொல்லுங்கள்**.

நீங்கள் சொல்லும் விடயங்கள் உங்கள் விண்ணப்பத்திற்கு மிகவும் முக்கியமானவை.

உங்களுக்கு அனைத்தும் நினைவில் இருக்காமல் போகலாம்; மேலும், எல்லாக் கேள்விகளுக்கும் உங்களால் பதிலளிக்க முடியாமல் போகலாம். உங்களுக்கு நினைவில் இல்லாவிட்டால், ஒரு பதிலை உருவாக்க வேண்டாம்; மாறாக, அது உங்களுக்கு நினைவில் இல்லை என்பதை விளக்குங்கள்.

**நீங்கள் அதிகாரசபைகளுடனான அனைத்து சந்திப்புகளிலும் கண்டிப்பாகக் கலந்துகொள்ள வேண்டும்**.

இந்தச் சந்திப்புகள் மிகவும் முக்கியமானவை. கொடுக்கப்பட்ட நாளன்றும், கொடுக்கப்பட்ட நேரத்திலும் நீங்கள் கலந்துகொள்ள வேண்டும்.







**நீங்கள் சரியான தொடர்பு விபரங்களை வழங்க வேண்டும்.**

நீங்கள் அனைத்து தகவல்களையும் சந்திப்பு நேரங்களையும் தவறாமல் பெறுவதை உறுதிசெய்ய, உங்கள் முகவரியையோ அல்லது தொலைபேசி இலக்கத்தையோ அதிகாரிகளுக்கு வழங்க வேண்டும். பாதுகாவலரும் இந்தத் தகவலைப் பெறுவார்; மேலும், அவர் உங்கள் சந்திப்பு நேரங்களை உங்களுக்கு நினைவூட்டலாம்.

உங்கள் தொடர்பு விபரங்கள் மாறினால், உங்கள் பாதுகாவலருக்கும் புகலிடம் தொடர்பான அதிகாரிகளின் பணியாளர்களுக்கும் அதைப் பற்றி தெரிவிக்கவும். அவர்கள் உங்களைத் தொடர்புகொள்ள முடிவது முக்கியம்.

- **உங்களிடம் உள்ள அனைத்து ஆவணங்களையும் அதிகாரிகளிடம் வழங்க வேண்டும்.**

உங்களைப் பற்றியும், நீங்கள் உங்கள் நாட்டை விட்டு வெளியேறிய காரணங்களையும் தொடர்புடைய, உங்களிடம் உள்ள அனைத்து ஆவணங்களையும் அவர்களிடம் வழங்குங்கள். இதில் அடையாள ஆவணங்கள் (கடவுச்சீட்டு), பிறப்புச் சான்றிதழ் அல்லது பாடசாலைச் சான்றிதழ், மருத்துவ ஆவணம் அல்லது பிற ஆவணங்கள் அடங்கும்.

அனைத்து தகவல்களையும் ஆவணங்களையும் நீங்கள் இயன்றவரை விரைவாக சமர்ப்பிக்க வேண்டும்.

**இந்த நேரத்தில் உங்களிடம் ஆவணங்கள் இல்லாவிட்டால், அவற்றை பின்னர் வழங்கலாம். உங்கள் பாதுகாவலருடன் பேசுங்கள். அந்த ஆவணங்களைப் பெறுவதற்கும், அவற்றை உரிய நேரத்தில் அதிகாரிகளுடன் பகிர்வதற்கும் உங்கள் பாதுகாவலர் உங்களுக்கு உதவக்கூடும்.**





## நான் எனது கடமைகளை நிறைவேற்றத் தவறினால் என்ன நடக்கும்?



உங்களுடைய கடமைகளை நீங்கள் நிறைவேற்றத் தவறினால், உங்களுடைய விண்ணப்பம் எதிர்மறையாகப் பாதிக்கப்படலாம்.

நான் விளக்கிய சில உரிமைகளையும் ஆதரவு சேவைகளையும் நீங்கள் இழக்க நேரிடலாம்.



**உங்களுடைய கடமைகளை நீங்கள் நிறைவேற்றத் தவறினால், உங்களுடைய புகலிட நடைமுறை நிறுத்தப்படலாம் அல்லது நிராகரிக்கப்படலாம். உதாரணமாக:**

- நீங்கள் அதிகாரசபைகளின் கேள்விகளுக்குப் பதிலளிக்காவிட்டால், அல்லது
- உங்கள் கைவிரல் அடையாளங்களை எடுக்க அவர்களை அனுமதிக்காவிட்டால், அல்லது
- அனுமதியின்றி நீங்கள் தங்கியிருக்கும் இடத்தை விட்டு வெளியேறினால்.

அத்தகைய சூழ்நிலைகளில், உங்கள் விண்ணப்பத்தில் நீங்கள் அக்கறை காட்டவில்லை என்று அதிகாரிகள் கருதுவார்கள். நீங்கள் விண்ணப்பதாரர் என்ற தகுதியை இழப்பீர்கள், மேலும் உங்களுக்கு வழங்கப்பட்ட அனைத்து ஆதரவையும் இழந்துவிடுவீர்கள்.









உங்களைப் பற்றிய உண்மையையோ அல்லது உங்கள் கதையையோ அதிகாரிகளிடம் நீங்கள் உண்மையாகச் சொல்லாவிட்டால், அல்லது முக்கியமான தகவல்களை மறைத்தாலோ, அல்லது உங்கள் ஆவணங்களை வேண்டுமென்றே அழித்தாலோ, உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்; மேலும், உங்களுக்கு புகலிடம் வழங்கப்படாமல் போகலாம்.

புகலிடம் கோரும் நடைமுறையின் போது நீங்கள் உண்மையைச் சொல்லவில்லை என்று அதிகாரிகள் பின்னர் கண்டறிந்தால், உங்களுக்கு வழங்கப்பட்ட புகலிடம் திரும்பப் பெறப்படலாம்.


**நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய மிக முக்கியமான விடயங்களை நான் உங்களுக்கு விளக்கினேன். புகலிட நடைமுறையின்போது உங்களுடைய பாதுகாவலரும் அதிகாரசபைகளும் உங்களுக்கு மேலதிக விளக்கங்களை வழங்குவார்கள்.**





**நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்!**

**புகலிடம் கோருவது இலவசமானது**






## எச்சரிக்கையாக இருங்கள்

சலுகைகளுக்கோ பணத்திற்கோ ஈடாக உதவி செய்வதாகக் கூறும் நபர்கள் தொடர்பாக எச்சரிக்கையாக இருங்கள். அவர்களுக்குத் தீய நோக்கங்கள் இருக்கலாம்.



யாராவது உங்களை வெளியேற முயற்சி செய்யும்படி ஊக்குவிக்கலாம். ஆனால் நீங்கள் வெளியேறக் கூடாது என்பதை நினைவில் கொள்ளுங்கள், ஏனெனில் அது உங்களுக்கு ஆபத்தானதாக முடியலாம்.






நீங்கள் விரும்பாத ஒன்றை அல்லது தவறானதாகத் தோன்றும் ஒன்றைச் செய்ய யாராவது உங்களை வற்புறுத்த முயற்சித்தால், உடனடியாக உங்களுடைய பாதுகாவலரிடமோ நீங்கள் தங்கியிருக்கும் இடத்தில் பணிபுரியும் பெரியவர்களிடமோ அதுகுறித்துத் தெரிவிக்கவும்.



**நான் எனது தாய் நாட்டிற்குத் திரும்பிச் செல்ல விரும்பி, எனது விண்ணப்பத்தை நிறுதினால், நான் என்ன செய்ய வேண்டும்?**





நீங்கள் உங்களுடைய தாய் நாட்டிற்குத் திரும்பிச் செல்ல விரும்பி உங்களுடைய விண்ணப்பத்தை நிறுதினால், உங்களுடைய பாதுகாவலரிடமும் அதிகாரசபைகளிடமும் தெரிவிக்கவும். அவர்கள் நீங்கள் பாதுகாப்பாகத் திரும்பிச் செல்ல உதவலாம்.



நான் இப்போது விளக்கியது குறித்து உங்களுக்கு மேலும் கேள்விகள் இருந்தால், உங்கள் பாதுகாவலரிடம், அதிகாரிகளிடம் அல்லது நீங்கள் தங்கியிருக்கும் இடத்தில் **பணிபுரியும் பணியாளர்களிடம் கேளுங்கள்**.



இந்தச் சிற்றேடு தகவல் நோக்கங்களுக்காக மட்டுமே ஆகும். இது தானாகவே உரிமைகளையோ கடமைகளையோ உருவாக்காது. ஐரோப்பிய ஒன்றிய புகலிட முகமை (EUAA), இந்த ஆவணத்தின் முக்கியப் பகுதியை வழங்கியுள்ளது, மேலும் இந்தச் சிற்றேட்டைப் பிரதியெடுப்பதும் அதில் மாற்றம் செய்வதும் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளுக்கு மட்டுமே EUAA-ஆல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஐரோப்பிய ஒன்றிய உறுப்பு நாடுகளால் அல்லது வேறு எந்தப் பொறுப்புள்ள மூன்றாம் தரப்பினரால் இந்தச் சிற்றேட்டில் சேர்க்கப்பட்டுள்ள தகவல்களின் துல்லியம், உள்ளடக்கம், முழுமைத்தன்மை, சட்டபூர்வத்தன்மை அல்லது நம்பகத்தன்மை என்பவற்றுக்கு EUAA எந்தப் பொறுப்பையோ கடமையையோ ஏற்காது. இந்தச் சிற்றேட்டில் காணப்படும் தகவல்களைக் கொண்டு உருவாக்கப்பட்டவற்றைப் பயன்படுத்தப்படுவதற்காக EUAA-வோ அல்லது EUAA சார்பாகச் செயற்படும் எந்தவொரு நபரோ பொறுப்பல்ல.

© ஐரோப்பிய ஒன்றிய புகலிட முகமை, 2025